

கலைஞர் 100 1924 - 2024

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 220 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – பங்குனி 08 – வியாழக்கிழமை 21 மார்ச் 2024 – கோவை ★ ★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 220 : Thiruvalluvar Year - 2055 - Panguni 08 - Thursday 21 March 2024 - Kovai ★★ 8 Pages ₹ 5.00




கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (19.3.2024) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், தி.மு.க. கூட்டணியில் மக்களவை தேர்தலில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக திருப்பூரில் போட்டியிடும் சுப்பராயன், நாகப்பட்டினத்தில் போட்டியிடும் வை. செல்வராஜ் ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். உடன் கழக பொருளாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான டி.ஆர்.பாலு, துணை பொதுச் செயலாளர்கள் முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி, நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (19.3.2024) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், தி.மு.க. கூட்டணியில் மக்களவை தேர்தலில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் சிதம்பரம் தொகுதியில் போட்டியிடும் அக்கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் மற்றும் விழுப்புரம் தொகுதியில் போட்டியிடும் ரவிக்குமார் ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். உடன் கழக பொருளாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான டி.ஆர்.பாலு, துணை பொதுச் செயலாளர் முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், நாடாளுமன்ற உறுப்பினர் திருச்சி சிவா, செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.

## ‘இந்தியா’ கூட்டணி மகத்தான வெற்றி அடைந்திட

# “ஒன்றுபட்டு நிற்போம்! வென்றுகாட்டியே தீருவோம்!”

## கழகத் தலைவர் – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிக்கை!

**சென்னை, மார்ச் 21 -**

**நடைபெற இருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் ‘இந்தியா’ கூட்டணி மகத்தான வெற்றி அடைந்திடவும், இந்திய ஒன்றியத்தில் ஆட்சி மாற்றத்தை நிகழ்த்திக் காட்டிடவும், ஒன்றுபட்டு நிற்போம்! வென்றுகாட்டியே தீருவோம்! என்று கழகத் தலைவரும் முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.**

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு :-

இந்திய ஒன்றியத்தின் பன்முகத்தன்மையைக் காக்கவும், மதவெறி சக்திகளை வீழ்த்தி மதநல்லிணக்கம் தழைக்கவும், அரசியலமைப்புச் சட்டம் வழங்கியுள்ள ஜனநாயகத்தை மீட்கவும் ‘இந்தியா’ கூட்டணியை 2024 நாடாளுமன்றத் தேர்தல் களத்தில் வெற்றிபெறச் செய்ய வேண்டும் என்கிற ஒரே இலக்குடன் திராவிட முன்னேற்றக் கழகத்துடன் இணைந்து நிற்கும் தோழமைக் கட்சியினர் அனைவரையும் வரவேற்கிறேன்.

கடந்த 10 ஆண்டுகாலமாக இந்திய ஒன்றியத்தை ஆட்சி செய்த பா.ஜ.க. அரசின் மக்கள் விரோத - மாநில உரிமைகளைப் பறித்த ஆட்சியை விரட்டிட, 2024 நாடாளுமன்றத் தேர்தல் களமே சரியான வாய்ப்பாகும் என்கிற உறுதியான



நம்பிக்கையுடன் இந்தியா கூட்டணியில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்குத் தோள் கொடுக்கும் தோழமைக் கட்சிகளுடன் களத்தைச் சந்திக்கிறோம்.

### தோழமைக் கட்சிகளுடன் களத்தைச் சந்திக்கிறோம்!

2019 நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பே தோழமைக் கட்சியினருடன் ஏற்பட்ட கொள்கை உறவு, தேர்தல் கூட்டணியாக இணைந்து 2019 நாடாளுமன்றத் தேர்தல் களம், 2021 சட்டமன்றத் தேர்தல் களம், ஊரக உள்ளாட்சித் தேர்தல் களம், மாநகராட்சி நகராட்சித் தேர்தல் களம் என அனைத்திலும் தொடர் வெற்றியைப் பெற்று வருகிறோம். ஐந்தாவது முறையாகத் தொடரும் இந்த கொள்கை அடிப்படையிலான வெற்றிக் கூட்டணியை அமைத்துள்ள தோழமைக் கட்சியினருக்கு உரிய வகையில் இடங்களை ஒதுக்கி, தொகுதிப் பங்கீடுகளைச் செய்யும் ஜனநாயகப்பூர்வமான நடைமுறையை திராவிட முன்னேற்றக் கழகம் தொடர்ந்து கடைப்பிடித்து வருகிறது.

### தோழமை இயக்கங்களிடம் உரிய முறையில் விளக்கம்!

பாசிசத்தை வீழ்த்திட வேண்டும் என்கிற ஒற்றை இலக்குடனான இந்தப் பயணத்தில், ஒரு சில ஜனநாயக இயக்கங்களுக்குத் தொகுதி ஒதுக்க இயலாத சூழல் ஏற்பட்டிருப்பது உண்மையில் எனக்கும் வருத்தத்தைத் தருகிறது. தொகுதிகளின் மொத்த எண்ணிக்கையையும் கூட்டணியின் வலிமையையும் கருத்தில் கொண்டு, இதுகுறித்து அனைத்துத் தோழமை இயக்கங்களிடமும் என் சார்பிலும் கழகத்தின் சார்பிலும் விளக்கப்பட்டுள்ளது.

நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தல் களத்தில் யாரை வீழ்த்த வேண்டும், அதற்கு எந்த வகையில் தங்கள் பங்களிப்பை வழங்க வேண்டும் என்பதைத் தொகுதிப் பங்கீட்டில் வாய்ப்பு பெறாத தோழமைக் கட்சியினரும் உணர்ந்து, உளப்பூர்வமான ஆதரவை நல்கி, தேர்தல் பணியாற்ற முடிவெடுத்திருப்பது ஆக்கப்பூர்வமான ஜனநாயகப் பண்பை எடுத்துக்காட்டுவதாக உள்ளது.

சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற மனிதநேய மக்கள் கட்சிக்கும், தமிழக வாழ்வுரிமைக் கட்சிக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் இடம் ஒதுக்க இயலாமல் போன நிலையிலும், மதவெறி பாசிசத்தை வீழ்த்திடத் தி.மு.க தலைமையிலான கூட்டணிக்குப் பக்கபலமாக இருப்போம் என அக்கட்சிகளின் நிர்வாகிகள் முடிவெடுத்து ஆதரவைத் தெரிவித்திருப்பதை வரவேற்கிறேன். மனதார நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

> **“2024 நாடாளுமன்றத் தேர்தல் களத்தில், “நாற்பதும் நமதே! நாடும் நமதே!” என்கிற வகையில் இந்தியா கூட்டணி மகத்தான வெற்றி அடைந்திடவும், இந்திய ஒன்றியத்தில் ஆட்சி மாற்றத்தை நிகழ்த்திக் காட்டிடவும் தங்கள் அனைவரின் ஒத்துழைப்பையும் வேண்டுகிறேன்.”**

### ஆதரவு தெரிவித்த கட்சிகளுக்கு நன்றி!

அதுபோலவே, இந்தியா கூட்டணி வெற்றி பெறக் களப்பணியாற்ற முன்வந்துள்ள அனைத்து ஜனநாயக இயக்கங்களுக்கும், நேரில் வந்து ஆதரவு தெரிவித்து வரும் அமைப்பினருக்கும் நன்றியினை உரித்தாக்குவதோடு, 2024 நாடாளுமன்றத் தேர்தல் களத்தில், “நாற்பதும் நமதே! நாடும் நமதே!” என்கிற வகையில் இந்தியா கூட்டணி மகத்தான வெற்றி அடைந்திடவும், இந்திய ஒன்றியத்தில் ஆட்சி மாற்றத்தை நிகழ்த்திக் காட்டிடவும் தங்கள் அனைவரின் ஒத்துழைப்பையும் வேண்டுகிறேன்.

ஒன்றுபட்டு நிற்போம்! வென்றுகாட்டியே தீருவோம்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

---

## நாடாளுமன்றத் தேர்தல் 2024:

# தி.மு.க. தேர்தல் அறிக்கை மட்டுமல்ல; தமிழ்நாட்டு மக்களின் தேர்தல் அறிக்கை!

### 21 தி.மு.கழக வேட்பாளர்கள் பட்டியலை வெளியிட்டு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்புரையாற்றினார்!

சென்னை, மார்ச் 21-

நாடாளுமன்றத் தேர்தல் 2024 - தேர்தலை முன்னிட்டு 21 தொகுதிகளில் தி.மு.க. போட்டியிடும் தி.மு.கழக வேட்பாளர்கள் பட்டியல் மற்றும் தி.மு.க. தேர்தல் அறிக்கையை கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (20.3.2024) காலை வெளியிட்டு சிறப்புரையாற்றினார்.

களம் காணும் 21 வெற்றி வேட்பாளர்கள் பட்டியலை வெளியிட்ட கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கழக தேர்தல் அறிக்கையை வெளியிட்டு உரையாற்றினார்.

(1). திருப்பெரும்புதூர் - டி.ஆர்.பாலு, (2). தூத்துக்குடி - கனிமொழி கருணாநிதி, (3). தென்காசி - டாக்டர் ராணி ஸ்ரீகுமார், (4).வடசென்னை-டாக்டர் கலாநிதி வீராசாமி, (5).தென்சென்னை-தமிழச்சி தங்கபாண்டியன், (6).மத்திய சென்னை - தயாநிதிமாறன், (7).காஞ்சிபுரம் - ஜி.செல்வம், (8).அரக்கோணம் - எஸ்.ஜெகத்ரட்சகன், (9).திருவண்ணாமலை - சி.என்.அண்ணாதுரை, (10). தருமபுரி - ஆ.மணி, (11).ஆரணி - தரணி வேந்தன், (12).வேலூர்-கதிர்ஆனந்த்,(13).கள்ளக்குறிச்சி- மலையரசன், (14).சேலம் - செல்வகணபதி, (15).கோவை - கணபதி ராஜ்குமார், (16).பெரம்பலூர் - அருண்நேரு, (17).நீலகிரி-ஆ.ராசா, (18).பொள்ளாச்சி - ஈஸ்வரசாமி, (19).தஞ்சாவூர் - முரசொலி, (20). ஈரோடு - பிரகாஷ், (21).தேனி - தங்க தமிழ்ச்செல்வன்.

இந்த தேர்தல் அறிக்கை தி.மு.க. தேர்தல் அறிக்கை மட்டுமல்ல; தமிழ்நாட்டு மக்களின் தேர்தல் அறிக்கை என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.